(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 24.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2022 ஒக்தோபர் 19 புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

31/2022

கௌரவ புத்திக பத்திரண,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வ/ப ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் தற்போதைய ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களில் ஆண் மற்றும் பெண் விமான நிலையச் சேவை முகவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) விமான சேவை பெண் பணியாளர்களில் விமானப் பணிப் பெண்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) விமானப் பணிப் பெண்களை ஆட்சேர்ப்புச் செய்யும் போது பரிசீலிக்கப்படும் கல்வி மற்றும் பிற தகைமைகள் தனித்தனியே யாவையென்பதையும்;

(ii) விமானப் பணிப் பெண்களை ஆட்சேர்ப்புச் செய்யும்போது திருமணமாகாத நிலை குறைந்தபட்ச தகைமையாக கருதப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) திருமண நிலையை மறைத்து சில பெண்கள் விமான சேவை பெண் பணியாளர்களாக சேவையில் இணைந்துள்ளார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இதன் காரணமாக தகைமைகளைப் பூர்த்தி செய்த சிலருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) இது சம்பந்தமாக விசாரணை நடாத்தி மேற்படி இ (1) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விமான சேவை பெண் பணியாளர்களாக சேவையில் இணைந்துள்ள பெண்களுக்கும் இவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்ட ஆட்களுக்கும் எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

298/2022

கௌரவ வசந்த யாப்பாபண்டார,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குண்டசாலை, திகன பிரதேசத்தின் அளுத்வத்த, கங்கபிட்டிய, விஜய ஸ்ரீ கம, அக்கர 30, அம்பகொட்டே ஆகிய பிரிவுகளில் சுண்ணாம்புக் கைத்தொழில் மேற்கொள்ளப்படுகிறது என்பதையும்;

(ii) திகன பிரதேசத்தில் நில அதிர்வு ஏற்பட மேற்படி கைத்தொழில் தாக்கம் செலுத்தியுள்ளதா என்பதை அறிவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவுகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்பதையும்;

(iii) சட்ட ரீதியான உரிமங்களை வழங்கும்போது மேற்படி முடிவுகளையும் சூழல் குறித்த சட்டங்களையும் கவனத்தில்கொள்ள வேண்டும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேசங்களில் சொத்துகளுக்கும் சுற்றுச் சூழலுக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து அறிந்துவைத்துள்ளாரா என்பதையும்;

(ii) மேற்படி பிரதேசங்களில் நில அதிர்வு ஏற்படுவதற்கு சுண்ணாம்புக் கைத்தொழில் தாக்கம் செலத்தியுள்ளமை ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், உரிமங்களை வழங்கும்போது ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப் பட்டுள்ள விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்படுகிறதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பிரதேசங்களில் உள்ள உரிமம்பெற்ற சுண்ணாம்புக் கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கையையும்;

(ii) அனுமதியற்ற சுண்ணாம்புக் கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கையையும்;

(iii) இவர்களுக்கு எதிராக எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளையும்;

(iv) சுண்ணாம்புக் கைத்தொழில் காரணமாக நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கையையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

345/2022

கௌரவ ஹேஷா விதானகே,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையின் முட்டை உற்பத்தியின் அளவு ஒவ்வொரு ஆண்டிலும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியினுள் முட்டை ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பின், அது தொடர்பான விபரங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்குறித்த காலப்பகுதியினுள் முட்டை இறக்குமதி செய்யப்பட்டிருப்பின், அது தொடர்பான விபரங்கள் யாவையென்பதையும்;

(iv) இலங்கையின் முட்டை உற்பத்தியை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

674/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில், ஹிங்குரக்கொட உட்பட்ட பல பிரதேசங்களில் வசிக்கும் பெரும்பாலான குடும்பங்கள் அலங்கார மலர்ச் செய்கையில் ஈடுபடுகின்றனர் என்பதையும்;

(ii) அத்தகைய மலர்ச் செய்கையாளர்களுக்குத் தேவையான மண்ணைப் பெற்றுக்கொள்வதில் காணப்படுகின்ற சிரமங்களையும், மலர்களுக்கென நிலையானதொரு விலை இல்லாமை காரணமாக இவர்கள் பல்வேறு பிரச்சினைகளையும் எதிர்நோக்கியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) அவ்வாறாயின், மேற்படி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை யாது என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

967/2022

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையின் தற்போதைய நிலைமை;

(ii) குறித்த தொழிற்சாலையில் உற்பத்தி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை;

(iii) அதற்கென முதலீடு செய்யப்பட்ட தொகை மற்றும் அத்தொகையை முதலீடு செய்த திகதி;

(iv) அதன் மூலம் உருவாக்கப்படும் தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை;

யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தொழிற்சாலை தொடர்பில் ஊழல் மற்றும் மோசடி இடம்பெறுவதை அறிவாரா என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

1107/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் ஆராய்வதற்காக சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள விதப்புரைகள் யாவையென்பதையும்;

(iii) பிணைமுறி மோசடியுடன் நேரடியாக தொடர்புடைய நபர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி பிணைமுறி மோசடி தொடர்பில் இற்றைவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1514/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2018 உள்ளூராட்சித் தேர்தல் நடாத்தப்பட முன்னர் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களாகச் செயற்பட்ட வெளிக்கள அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அலுவலரும் சேவையாற்றிய நிறுவனம் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) அவர்களில் தவிசாளர்/துணைத் தவிசாளர்/மாநகர முதல்வர்/ மாநகர துணை முதல்வர்களாகச் செயற்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் தொடர்புடைய உள்ளூராட்சி மன்றங்கள் யாவையென்பதையும்;

(iv) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களில் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களாகச் செயற்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) அவர்களில் தவிசாளர்/துணைத் தவிசாளர்/மாநகர முதல்வர்/ மாநகர துணை முதல்வர்களாகச் செயற்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் தொடர்புடைய உள்ளூராட்சி மன்றங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வெளிக்கள அலுவலர்கள் தேர்தலில் போட்டியிடுவதைத் தடை செய்து அப்போதைய அரசாங்கம் கொண்டுவந்த சட்டங்களின் காரணமாக (அ)(iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதனை சீர் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

(iii) தொடர்புடைய சட்டத்தைத் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) அத்திகதி யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

1526/2022

கௌரவ இஷாக் ரஹுமான்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலாவெவ, பென்னும அரசாங்க வைத்தியசாலையானது மகாவலி இயக்கம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாகவே ஆரம்பிக்கப்பட்டதொரு வைத்தியசாலை என்பதையும்;

(ii) தற்போது மேற்படி வைத்தியசாலையின் கட்டடங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையின் கட்டடங்களைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1672/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தோட்டப்புறங்களில் வாழும் குடும்பங்களில் தற்போது சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தோட்டப்புறங்களில் வாழும் அதிகளவான குடும்பங்களுக்கு சமுர்த்தி அனுகூலத்தை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1895/2022

கௌரவ அஜித் மான்னப்பெரும,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சேதனப் பசளையை பிரபல்யப்படுத்தும் வேலைத்திட்டம் காரணமாக 2022 ஆம் ஆண்டின் பெரும்போகத்தில் நெல் அறுவடையானது பாரியளவில் குறைவடைந்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) அதற்காக நட்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், இன்றளவில் வழங்கப்பட்டுள்ள நட்டஈட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) இது வரையில் நட்டஈடு வழங்கப்பட்டுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்ட வாரியாக தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(v) நட்டஈடு வழங்குகையில் பின்பற்றப்படும் வழிமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"வீமங்சா தம்மகுப்த மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

2.

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"ஸ்ரீ சீலானந்த மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

நொத்தாரிசு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

அற்றோணித் தத்துவம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

ஆவணங்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

விருப்பாவணங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

அரசியலமைப்புக்கான இருபத்திரெண்டாம் திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

அபாயகரமான விலங்குகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

சிறுகோரிக்கை நீதிமன்றங்களின் நடவடிக்கைமுறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

நீதித்துறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

மாகாணங்களின் மேல் நீதிமன்றம் (சிறப்பு ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15

புனர்வாழ்வுப் பணியகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16

கண்டிய திருமண, மணநீக்கம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான சட்டத்தின் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 2அ பிரிவின் கீழ், பெறுமதி சேர் தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2022 மே 31 ஆம் திகதிய 2282/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.1),— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 22(1) ஆம் பிரிவின் கீழ் போத்தலில் இடப்பட்ட கள்ளின் மீதான மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 ஏப்ரல் 29 ஆம் திகதிய 2277/62 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 03/2022)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.2),— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 32 ஆம் பிரிவின் கீழ் எத்தைல் மதுசாரத்திற்கான மதுவரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 யூன் 08 ஆம் திகதிய 2283/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2022)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின் கீழ் புறப்படுகை அறவீடு தொடர்பில், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 மார்ச் 27 ஆம் திகதிய 2272/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— அந்நியச் செலவாணி சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலவாணி சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் 2021 யூன் 30 ஆம் திகதிய 2234/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் திருத்தப்பட்டு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2022 செப்டெம்பர் 08 ஆம் திகதிய 2296/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

கடற்றொழில் அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2021 நவம்பர் 24 ஆம் திகதிய 2255/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*25.

கடற்றொழில் அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் 64(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 61(1)(ஆ) ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 பெப்ரவரி 07 ஆம் திகதிய 2266/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*26.

கடற்றொழில் அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 ஏப்ரல் 25 ஆம் திகதிய 2277/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*27.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 126 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 மார்ச் 31 ஆம் திகதிய 2273/76 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.08.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*28

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (54 ஆம் அத்தியாயமான) சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 94 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 யூலை 12 ஆம் திகதிய 2288/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டதும் 2022.10.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

29.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதிய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

கிழக்கு மீளெழுச்சி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.

இலங்கை பட்டயக் கப்பற் தரகர்கள் நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.

சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார மற்றும் விளையாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.

தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சிபீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.

சஹன சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.
சமாதி தியான மன்றும் யோகாசன நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.
றுஹுணு உதானய அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.
“மாத்தறைப் பருவம்” அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50.
ரதன திஸ்ஸ சமாதான மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

51.
இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

52.
ஷைலி கல்விசார் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

53.
விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

54.
முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

55.
களனி பௌத்த மகளிர் தருமச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

56.
தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

57.
இந்திரா புற்றுநோய் நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

58.
இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.